**செய்தி வெளியீடு எண்:1284** **நாள்:06.12.2021**

## செய்தி வெளியீடு

### தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் கட்டணமின்றி நிரந்தர உறுப்பினர் சேர்ப்பதற்கான கால அவகாசம் நீட்டிப்பு – மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்களின் அறிவிப்பு

தமிழ்நாடு வணிகர் நல வாரியம் வணிகர் பெருமக்களின் நலனுக்காக இந்தியாவிலேயே முதன்முதலாக 1989 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் நலனுக்காக குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி, உறுப்பினரின் வாரிசுகளுக்கு விளையாட்டு நிதி உதவி, தீ விபத்து உதவி, நலிவுற்றோருக்கான நிதி உதவி, விபத்து கால உதவி, திருமண உதவி போன்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டங்களின் வாயிலாக 1989ம் ஆண்டு முதல் இதுவரை ரூ.3,05,73,000/– மதிப்பீட்டில் 8,873 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின் சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தில் பதிவு பெற்ற வணிகர்கள் மற்றும் பதிவு பெறாத வணிகர்களில் வருடத்திற்கு (விற்று முதல் அளவு – Turnover) ரூ.40,00,000/– வரையிலான வியாபாரம் செய்யும் வணிகர்கள், வாரியத்தின் பலனைப் பெறும் வகையில் உறுப்பினர் ஆவதற்கான கட்டணத் தொகையான ரூ.500/–யை செலுத்துவதிலிருந்து 15.07.2021 முதல் மூன்று மாதங்களுக்கு விலக்களிக்கப்பட்டது.

இதன் பயனாக 15.07.2021 முதல் 14.10.2021 வரை 40.442 (இணை ஆணையர் அலுவலகங்கள் மூலமாக 31,898 மற்றும் நேரடி இணைய வழியாக 8,544) வணிகர்கள் தங்களை இவ்வாரியத்தில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ள விண்ணபித்துள்ளனர்.

பல்வேறு தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்புகளின் கோரிக்கையை ஏற்று வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர் ஆவதற்கான கட்டணத் தொகையான ரூ.500/–யை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும் கால அவகாசத்தை 31.03.2022 வரை நீட்டித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள் என மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**